① — II nd COPY A15

உங்கள் May 11, 1969 கடிதத்தின் கேள்விகளுக்கான பதில்கள்:-

கேள்வி 1

பதில்:— விசேஷ காலங்களில் விருந்தினர்களை அழைத்து சாப்பாடு கொடுப்பதில் பல சமயங்கள் உண்டு. அவைகள்:-

1. கல்யாணம்
2. இரட்டை சீர்
3. எளிதீங்கள்
4. காதுகுத்து
5. கட்டுசாதவிருந்து
6. பொங்கல் விழா
7. இறப்பு சீர்
8. சேர்மன், மற்றும் முக்கிய நண்பர்களுக்கு கொடுக்கும் விருந்து

இப்படியாக பலவழியால் ~~இவ்~~ விருந்து கொடுப்பார்கள்.
இவைகளில் கல்யாணம், இரட்டை, எளிதீங்கள், கட்டு சாத விருந்து, இறப்பு சீர் இவைகளுக்கெல்லாம் கண்டிப்பாய் சைவ உணவுகளையே விருந்தினர்களுக்கு கொடுப்பார்கள்.

① கல்யாணம், இரட்டை சீர், எளிதீங்கள் இவைகளுக்கெல்லாம் காலை உணவு கொடுக்கும்போது இட்லி, தேங்காய் சட்னி சாம்பார், கோதுமை ரவை உப்புமா, பட்டணம் ரவை உப்புமா, புளிசாதம், எலுமிச்சை சாதம், ஒரு இனிப்பு பலகாரம், ஒரு பழம் (வாழைப்பழம்) மேற்கண்ட உணவு ~~[illegible]~~ காலை இவை கொடுப்பார்கள். கடைசியாக காப்பி கொடுப்பார்கள்.

பகல் & இரவு உணவுகளாக அரிசிசாதம், இரண்டு வகைப் பொரியல்கள், சர்க்கரை, பழம், இனிப்பு பலகாரம் ஒன்று, நெய், பருப்பு, புளிக்குழம்பு, சாம்பார், கூட்டு, மோர்க் குழம்பு, தயிர் பச்சடி, ரசம், வடை, பாயாசம், அப்பளம், தயிர், ஊறுகாய், வறுவல், உப்பு இப்படிப்பட்ட உணவுகளை கொடுப்பார்கள்.

மேற்கண்டவாறு உணவுகளை கொடுப்பது நல்ல வசதியான குடும்பந்தான். ஏழைக் குடும்பமாக இருந்தால் காலை உணவாக ஒரு உப்புமா அத்துடன் புளிசாதம் சர்க்கரை பழம் இவைகள் மட்டும் கொடுப்பார்கள்.

பகல் & இரவு உணவாக அரிசிசாதம், பொரியல் இரண்டுவகை, சர்க்கரைபழம், அப்பளம், கூட்டு, பருப்பு, சாம்பார், ரசம், மோர், உப்பு இந்த அளவில் உணவு கொடுப்பார்கள்.

② கட்டுசாத விருந்தின்போது எலுமிச்சம்பழ சாதம், எள் சாதம், புளிசாதம், தேங்காய் சாதம், சாம்பார் சாதம், [illegible] சாதம், தயிர் சாதம் இப்படி ஏழுவகை சாதத்துடன் ஏதேனும் இனிப்பு பலகாரம் சர்க்கரை பழம், வெள்ளைசாதம், இரண்டு வகைப் பொரியல்கள், பருப்பு, நெய், புளிக்குழம்பு மோர்க்குழம்பு, தயிர் பச்சடி, கூட்டு, அப்பளம், வடை பாயாசம், வறுவல், ஊறுகாய், தயிர்

இவைகளுடன் சாப்பாடு கொடுப்பார்கள்.
காலை உணவாக இட்லி, தேங்காய் சட்னி சாம்பார் உப்புமா, ஏதோ இனிப்பு பலகாரம், நெய், பழம்
சர்க்கரை இவைகளுடன் உணவு கொடுப்பார்கள். கடைசியாக
காபி கொடுப்பார்கள்.
நல்ல வசதியுள்ளவர்கள் இப்படி சாப்பாடு கொடுப்பார்கள். வசதி
சற்று குறைவாக உள்ளவர்கள் கொஞ்சம் குறைந்த வகையால்
சாப்பாடு கொடுப்பார்கள்.

௩ இறப்பு சடங்கின்போது அரிசி சாதம் பருப்பு, சாம்பார், இரண்டு
பொரியல், அப்பளம், மோர், ரசம், ~~ஊறுகாய்~~ இவைகளுடன் மட்டும்
சாப்பாடு கொடுப்பார்கள். இனிப்பு பலகாரமோ பழமோ ~~இவைகள்~~
கொடுக்கமாட்டார்கள்.
காலை உணவு கொடுத்தால் உப்புமாவுடன் புளிசாதமோ அல்லது தேங்காய்
சாதமோ ஏதோ ஒன்றை செய்து கொடுப்பார்கள். அத்துடன் காபி
கொடுப்பார்கள்.

௪ காதுகுத்து, ~~கல்யாண நிச்சயதார்த்தம்~~ பொங்கல் விழா, ~~சீமந்தம் மற்றும்~~
~~மற்ற நல்ல காரியங்களுக்கு~~ இவைகளுக்கு உணவு கொடுத்தால் காலை உணவாக
இட்லி, தோசை, உப்புமா, பூரி, சட்னி, சாம்பார் ~~இவைகளுடன்~~
இனிப்பு பலகாரம் ஒன்று, பழம் இவைகளுடன் உணவு கொடுப்
பார்கள். மத்தியானம் 2 வேளை உணவுக்கு சைவ உணவுடன்
இனிப்பு பலகாரம் வடை பாயாசம், பழம் இவைகளுடன் ~~கொடுப்பார்கள்~~ கொடுப்பார்கள்.
~~மீன் [illegible] உணவாக கொடுக்கவும்~~
சிலர் மாமிச உணவுகளும் கொடுப்பார்கள். மாமிச உணவு கொடுத்தால்
ஆட்டுக்கறி, கோழிக்கறி, மீன், முட்டை, ~~[illegible]~~ இப்படிப்பட்ட
மாமிசங்கள் உணவாக கொடுப்பார்கள்.

சீமந்தம் மற்றும் ஏதோ சில உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும்
உணவு கொடுப்பதாக இருந்தால் சைவ உணவுகளுடன் இனிப்பு
பலகாரம், பழம் ~~இவைகள்~~ இவைகள் எல்லாம் சேர்த்து கொடுப்பார்கள்.
மாமிச உணவு கொடுத்தால் மட்டன் பிரியாணி அல்லது கோழி பிரியாணி
மற்றும் முட்டை ஆம்லட், மீன் கறி, [illegible] கறி இப்படி ஏதோ சில
உணவாக கொடுப்பார்கள்.

மேற்கண்ட எல்லா விசேஷங்களுக்கும் இறப்புசடங்கு தவிர
மற்ற எல்லாவற்றிற்கும் சிற்றுண்டி கொடுப்பதாக
இருந்தால் கேசரி அல்வா, லட்டு, ஜிலேபி, மைசூர்பாக்
இவைகளில் ஏதோ ஒன்று அல்லது இரண்டு இனிப்பு பலகாரங்
களும் அத்துடன் வடை, முறுக்கு, பஜ்ஜி, பக்கோடா, போண்டா,
மிக்சர், இப்படி ஏதோ ஒன்றிரண்டு காரவகை பலகாரங்களுடன்
பழமும் கொடுப்பார்கள். கடைசியாக காபி கொடுப்பார்கள்.

மேலும், மேற்கண்ட எந்த விசேஷங்கள் நடந்தாலும் அந்தக் குடும்பத்தினருக்கும் மற்றும் வேலை செய்யும் வண்ணான், நாவிதன், சக்கிலியர்கள் எல்லோருக்கும் விருந்துக்கு செய்த உணவையே போடுவார்கள். விசேஷநாட்கள் இல்லாத நாட்களில் நான் உணவுப்பட்டியலில் இருந்ததை C உணவு வகைகளில் ஏதை வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

விசேஷ நாட்களில் விருந்தினர்களுக்கும் வீட்டினருக்கும் AB உணவைக் கொடுத்து வண்ணான், நாவிதன், சக்கிலியர் ஆகியோர்களுக்கு மட்டும் தனியாக C உணவுகளைக் கொடுத்தால் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்.


விசேஷமில்லாத நாட்களிலும் அரிசிசாதம் எப்போதும் செய்து சாப்பிடும் குடும்பத்தில் மேற்கண்ட உணவுகளைக் கொடுத்தாலும் பெறமாட்டார்கள். ஏதாவது ஒருநாள் அரிசிசாதம் செய்து குடும்பங்களில் கம்புசோறு, சோளச்சோறு, கேழ்வரகு களி செய்து சாப்பிடும் குடும்பங்களில் வண்ணான், நாவிதன் ஆகியோர்களுக்கும் அதே சாதத்தை கொடுப்பார்கள்.

மற்றபடி வசதியுள்ள காலங்களில் புளியங்காய் ஊறுகாய் தயாரித்து கொடுக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை தனியாக இனிப்பு உணவு தயாரித்து கொடுக்க வேண்டுமென்ற நியதி இல்லை. எந்த விசேஷத்திலும் தயாரித்த உணவு புளி, காரம், உப்பு இவைகள் சேர்த்து தயாரித்த உணவுகள் இனிப்புகள் சேர்த்து தயாரித்த உணவுகளை ~~[illegible]~~ விரும்பி ஏற்றுக் கொள்வார்கள்.

[illegible]

கேள்வி 2

பதில்:—



ஒரு மனிதர் சாப்பிடுவதற்கு இலைபோட்டால் மேற்கண்ட முறையில் உணவுகளை படைப்பார்கள்.

1. உப்பு
2. ஊறுகாய்
3. வறுவல்
4. இனிப்பு பலகாரம் & பழம்
5. பொரியல்
6. அவியல்
7. கூட்டு
8. தயிர் பச்சடி
9. பருப்பு & நெய்
10. சாதம்
11. அப்பளம்
12. புளிக்குழம்பு. இவைகள்போக பாயாசம், ரசம், தயிர் இவைகள் எல்லாம் மறுபடித்தான் கொடுப்பார்கள்.

அது:- முதலில் இனிப்பு பலகாரம் பழம் இவைகளை சாப்பிடுவர். அதன் பிறகு சாதத்துடன் பருப்பை போட்டு கலந்து சாப்பிடுவார். அதன் பிறகு புளிக்குழம்புடன் சாப்பிடுவர். அதன்பிறகு கூட்டுடன் சாப்பிடுவர். அதன் பிறகு தயிர் பச்சடியுடன் சாப்பிடுவர். அதன்பிறகு தான் ரசம் கொடுப்பார்கள். ரசத்துடன் சாதம் சாப்பிட்டவுடன் No 9 உள்ள இடத்தில் பாயாசம் ஊற்றுவார்கள். பாயாசம் சாப்பிட்டு முடிந்த பின் ~~தயிருடன் சாதம்~~ தயிர் கொடுப்பார்கள். தயிருடன் சாதம் சாப்பிட்டால் சாப்பிடும் வேலை முடிந்தது.

மேலே இருக்கும் இலை படத்தைப் பாருங்கள். ~~பார்த்தால் ஒரு ஆள் வடக்கு முகமாக ஒரு ஆள் கிழக்கு முகமாக உட்கார்ந்து சாப்பிடுவதை நினைக்கவும்~~. ஒரு ஆள் எந்த முகமாக உட்கார்ந்து சாப்பிட்டாலும் அவரின் இடதுகை பக்கம் நுனி இலை இருக்கிற மாதிரி இலை போடுவார்கள்.

பொரியல், அவியல், வறுவல், அப்பளம், ஊறுகாய் இவைகளை சாதம் சாப்பிடும் போது கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து சாப்பிடுவார். உப்பு தயிர் சாதத்திற்கு போட்டுக் கொள்வதற்காக வைக்கப்படுகிறது.

சாப்பிட்டு முடிந்ததும் எழுந்து கை கழுவிக் கொண்டு வெற்றிலைபாக்கு போட்டுக் கொள்வார்.

இந்தமாதிரி இலையில் உணவு படைப்பது ஜாதிக்கு ஜாதி மாறுபடும் என்று சொல்ல முடியாது. எல்லா ஜாதியருமே உணவு ~~பல~~ சரியான முறையில் படைக்கத்தெரியாதவர்கள்

நிறைய இருக்கிறார்கள். அவர்கள் படைக்கும் போது கண்டிப்பாய் மாற்றம் ஏற்படும். உணவு நல்ல முறையால் படைக்கத் தெரிந்தவர்கள் படைத்தால் மாறாது.

அதே மாதிரி சாப்பிடும் போது சிலர் முறையோடு சாப்பிடுவார்கள். சிலர் சாப்பிடுவதில் கொஞ்சம் முறை மாறிவிடும். அவ்வாறு ஏற்படுவதெல்லாம் அவர்களுடைய பழக்கங்களனைத்தும். மற்றபடி ஜாதிகளின் முறைப்படி மாறுதல் ஏற்படாது என்றே நினைக்கிறேன்.

இலையால் படைத்த உணவுகளை ~~சிலர் ஒதுக்~~ ஏதோ சிலதை சிலர் சாப்பிடாமல் ஒதுக்கி விடுவதுமுண்டு. ஆனால், அது ஜாதியின் பெயரால் ஒதுக்கப்படுவதில்லை. அந்த உணவு பதார்த்தம் அவருக்கு இஷ்டமில்லாவிட்டால் சாப்பிடாமல் ஒதுக்கி விடுவார்.

கேள்வி 4

பதில்:- உணவில் உப்பு போடாமல் எந்த ஜாதியுமே சமைக்கமாட்டார்கள். அவ்வாறு உப்பு போடாமல் சமைக்கும் ஜாதி இருப்பதாகத் தெரியவில்லை. உப்புப் போட்டு சமைக்கக்கூடிய பதார்த்தங்களுக்கு கண்டிப்பாய் உப்பு போட்டுத்தான் சமைப்பார்கள்.

உணவில் உப்பு போட்டுச் சமைத்தாலும் சாப்பிடும் போது இலையில் கண்டிப்பாய் உப்பு வைப்பார்கள். இது பழக்கம். இந்த உப்பு பதார்த்தங்களுக்கு உப்பு குறைவாக இருந்தால் கொஞ்சம் சேர்த்து சாப்பிடுவார்கள். கடைசியில் தயிர் சாதத்திற்கு போட்டு சாப்பிடுவார்கள்.

இலையில் உப்பு வைக்கும் போது முறைப்படி சாப்பிடுபவரின் இடது கை பக்கம் இலையின் முனையில் வைப்பார்கள்.

12. வது கேள்வி

பதில்:- இத்துடன் அனுப்பியுள்ள எண் (11) போட்ட படம் நான் நிலக்கோட்டை போயிருந்த போது அங்குள்ள பெருமாள் கோயிலின் மேல் தளத்தை போட்டோ பிடித்தேன்.

இந்தப் போட்டோ கோயிலின் பின்புறம் தென்மேற்கு பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. ★ படத்தில் x← இந்த மாதிரி குறியிட்டிருப்பது கோயிலின் பின்புறம். o← இந்த மாதிரி குறியிட்டிருப்பது கோயிலின் தெற்கு பக்கம். படத்தில் உள்ள கோயிலின் உள்ளேதான் பெருமாள் சுவாமி இருக்கிறது.

17 வது கேள்வி

பதில்:-

இந்தவருஷம் கன்னபுரம் மாரியம்மன் திருவிழா கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தால் நின்று விட்டதல்லவா? அதனால், 17.4.69 முதல் 16.5.69 முடிய (ஒருமாதம்) கோவிலுக்கு சேர்ந்த பண்டாரங்கள் எல்லோரும் பொதுவில் பூஜை செய்தோம். இந்தக் கோயிலுக்கு 11 பங்கு பண்டாரங்கள் இருக்கிறோம். 11 பங்குக்கும் 11 ஆள் கோவிலுக்கு தினமும் வரவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை ஏற்படுத்திக் கொண்டோம். அதே மாதிரி 17.4.69 முதல் 16.5.69 முடிய ஒவ்வொரு பங்குக்கு ஒரு ஆள் வீதம் மொத்தம் 11 ஆள் கோயிலுக்கு வந்து விடுவார்கள். ஒவ்வொரு நாளும் 11 பண்டாரங்களில் யாரோ இருவர் குளித்துக் கொண்டு சுவாமிக்கு பூஜை செய்யும் வேலையை கவனிப்பார்கள். மற்ற பண்டாரங்கள் சும்மா இருக்கலாம். பொதுவில் பூஜை செய்த ஒரு மாதமும் மாரியம்மன் பூஜை செலவு தினசரி 1 ரூபாய் செலவு ஆகியது. அந்த செலவு:-

தினசரி: 1/4 படி பச்சரிசி
1 தேங்காய்
2 பழம்
வெற்றிலைபாக்கு, சூடம், சாம்பிராணி, மஞ்சள்தூள் இவைகள்.

1.5.69 அன்று (பௌர்ணமியன்று) வியாழக்கிழமை காலையில் பண்டாரங்கள் எல்லாம் குளித்துக் கொண்டுவந்து மூன்றுபடி பச்சரிசி போட்டு பொங்கல் வைத்து, 1/2 படி பச்சரிசி போட்டு பச்சைமாவு இடித்தோம். மற்றும் 16 அபிஷேகங்களுக்கு சாமான்கள் வாங்கி மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்தோம். மற்றும் 9 பண்டாரங்கள் சேர்ந்து ஆளுக்கு 5 ரூபாய் வீதம் சேர்த்து மொத்தம் 45 ரூபாய்க்கு ஒரு வெள்ளாட்டுக்கிடாய் வாங்கி சுவாமிக்கு வெட்டினோம். பிறகு, சாமிக்கு பொங்கல் சாதம் படைத்து மாவிளக்கு வைத்து பூஜை செய்தோம். இந்த பூஜை:-(திருவிழா காலங்களில் பொங்கல் நாளன்று வியாழக்கிழமை காலை முப்பாட்டு பொங்கல் வைத்து மகாபிஷேகம் செய்து பூஜை செய்வது மாதிரி) நடத்தப்பட்டது. மாரியம்மனுக்கு புதிய துணி ஒன்று வாங்கினோம்.

பிறகு, பொங்கல் சாதம், பஞ்சாமிர்தம் இவைகளை பண்டாரங்களின் பங்கின்படிகாரம் பங்குபோட்டு வைத்துக் கொண்டோம். வெள்ளாட்டுக்கிடாய் கறியை கிடாய் வாங்க பணம் போட்ட 9 பேரும் பங்குபோட்டு வைத்துக் கொண்டோம். கிடாயின் தோலை 10 ரூபாய்க்கு விற்று விட்டோம்.

அன்று இரவு அத்தாம்பாளையம் தீர்த்தக் காவடி வந்தது. மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்து தீர்த்தம் விடப்பட்டது.

1.5.69. நாங்கள் மாரியம்மனுக்கு நடத்திய விசேஷ பூஜைக்கு 25 ரூபாய் செலவானது.

பொங்கல் பார்த்த 30 நாளில் மாரியம்மனுக்கு செவ்வடமாக வந்த புதிய துணிகள் 6, தீபத்துக்கம்பம் ~~பித்தளை~~ வெங்கலம் 1, பித்தளைத்தட்டங்கள் 2, வெள்ளிக்காலிகள் 2  உ-(இந்த மாதிரி வெள்ளியால் செய்யப்பட்டது) மற்றும் வெள்ளிக்கண்ணடைக்காய்கள் இரண்டு ஆகியவைகள் வந்தது. அவைகளில் புதிய துணிகள் 2 தட்டம் ஒன்று இவைகள் எல்லாம் சுவாமிக்காக கோவிலில் வைத்துவிட்டோம். மறுபடி துணிகள் 4, தீபத்துக்கம்பம், பித்தளைத்தட்டம் ஒன்று, வெள்ளிக்காலிகள் இரண்டு இவைகள் எல்லாம் ஏலத்தில் விடப்பட்டது. அவைகளில் 1 சீட்டித்துணியை 80 நயா பைசாவுக்கும் தீபத்துக்கம்பம் 11.50 பைசாவுக்கும் இவைகள் இரண்டையும் ஏலத்தில் நான் எடுத்துக் கொண்டேன்.

வெள்ளிக்காலிகள் இரண்டையும் கன்னபுரம் அய்யாவு பண்டாரம் 2.50க்கு ஏலத்தில் எடுத்துக் கொண்டார். மற்றும், ஒரு பட்டுத்துணியை என் அண்ணா K. ஆறுமுகம் எடுத்துக் கொண்டார். மற்றும் 2 துணிகள் ஒரு தட்டம் ஆகிய மூன்று சாமான்களையும் பச்சாபாளையம் பண்டாரம் எடுத்துக் கொண்டார். இவர்கள் இருவரும் என்னவிலைக்கு ஏலத்தில் எடுத்தார்கள் என்பதை மறந்து விட்டேன்.

மேற்கண்ட சாமான்கள் ஏலம் விட்ட பணமும் 17.4.69 முதல் 16.5.69 வரை கோயிலுக்கு கிடைத்த வருமானமும் ஆக மொத்தம் 429.50. இதில் அடுத்த சித்திரை மாதம் வரை கரண்ட் சார்ஜ் கட்டுவதற்கு 100 ரூபாய் எடுத்து வைக்கப்பட்டது. 1.5.69 விசேஷ பூஜைக்காக 25 ரூபாய் செலவு செய்யப்பட்டது. மற்றும் 17.4.69 முதல் 16.5.69 வரை தினமும் ஒரு ரூபாய் வீதம் 30 ரூபாய் ~~செலவு~~

| | |
|---|---|
| | 429.50 |
| ஆக மொத்தம் செலவு | 155/00 |
| மீதி | 274/50 |

Rs. 274.50 பைசாவை பண்டாரங்களின் பெரிய பங்கு பிரகாரம் 3 ஆக பங்கு வேண்டும். அப்படிப் பங்கிடில் ஒரு பங்குக்கு Rs.91/50 பைசா வரும். 3ல் ஒரு பங்கான 91/50 பைசாவை நாங்கள் பச்சாபாளையம் ரட்டிவலசு கோலப்பாளையம் ஆகிய ஊர் பண்டாரங்கள் 5 ஆக பங்கு வைத்துக் கொண்டோம். அப்படி பங்கிட்டதில் ~~ரட்டிவலசு அப்பண்ணபண்டாரம்~~ ஒவ்வொரு பங்குக்கும் Rs.18/30 பைசா வந்தது.

5 பங்கிக்கும் பாத்தியப் பட்டவர்கள்

1. ரட்டிவலசு சுப்பணபண்டாரம்
2. பச்சாபாளையம் முத்துபண்டாரம்
3. ,, சேமியபண்டாரம்
4. செலம்பாளையம் கிருஷ்ண பண்டாரம்
5. ,, K. அந்தரம்.

முன்பு சொன்ன பெரிய பங்கில் 3ல் ஒன்றை நாங்கள் எடுத்த பங்கில் கொண்டது போக மீதி 2 பங்கு கிடைக்கும் அந்த இரண்டையும் கண்ணபுரம் பண்டாரங்கள் எடுத்து 3 ஆக பங்கிவார்கள்.

91.50
91.50
183.00

183.00 3 ஆக பங்கில் ஒரு பங்கிற்க்கு 61 ரூபாய் வீதம் வரும்.

மேற்கண்ட 3 பங்கில் ~~அத்தாம்பாளையம், காங்கயம்பாளைய~~

1. அத்தாம்பாளையம் கருப்பண பண்டாரத்திற்கும் காங்கயம்பாளையம் கணபதி பண்டாரத்திற்கும் ஒரு பங்கு
2. கண்ணபுரம் கோவிந்த பண்டாரத்திற்கும் ,, சோமண பண்டாரத்திற்கும் ஒரு பங்கு
3. கண்ணபுரம் ஐயாவு பண்டாரத்திற்கும் வெள்ளகோவில் சோழீடர் கணபதி பண்டாரத்திற்கும் ஒரு பங்கு.

ஆக மொத்தம் ஆறு பங்கு. அவர்களில் ஒவ்வொரு பங்கிக்கும் 30/50 பைசா வரும்.

மேற்கண்ட முறைகளில் தான் பங்கெரித்தோம். மற்றும் பொங்கல் சாதம், தெங்காய்பழம் இவைகள் எல்லாம் மேற்கண்ட முறைகளில்தான் பங்கெரித்தோம்.


இந்த வகையும் வண்ணான், நாவிதன், பறையன், நாடார் இவர்கள் யாருக்கும் மெரால் பிரசாதம் கிடையாது பணியும் இல்லை.

என்னுடைய பங்கிக்கு சுமார் 10 நாட்கள் கோயிலுக்கு போனேன். மற்ற 20 நாளும் எனக்கு பதிலாக என் அண்ணன் K. முத்துவை அனுப்பினேன்.

முன்பு ஒரு கதைத்தில் என் பங்கிக்கு 15.30 பைசா வந்ததாக குறிப்பிட்டு இருந்தேன். அதன் பிறகு என் பங்கிக்கு 3 ரூபாய் வந்தது. அவைகள் இரண்டும் சேர்த்து இப்பொழுது மொத்தக் கணக்காக குறித்துள்ளேன்.

மற்றபடி ~~கன்னபுரத்திலிருந்து~~ ஒருவீட்டுக்கு ஒரு பெண் வீதம் அந்த ஊர் பூராம் சேர்ந்து மாரியம்மனுக்கு 3 நாள் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி கடைசிநாள் ~~அபிஷேக~~ அபிஷேகம் செய்தார்கள் என்று குறிப்பிட்டு இருந்தேன். அதன் விபரம்:- கன்னபுரம் ஊரில்மட்டுந்தான் வீட்டுக்கு ஒரு பெண் சேர்ந்து தண்ணீர் கொண்டுவந்து மாரியம்மனுக்கு ஊற்றுகிறார்கள். கீழ் கிராமம் பூராவும் வீட்டுக்கு ஒரு பெண் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றவில்லை.

கன்னபுரம் பெண்கள் மாரியம்மனுக்கு தண்ணீர் கொண்டு வந்து ஊற்றிய முறை




கம்பத்துக்கருப்பணன் பக்கம் ○← இந்தமாதிரி குறியிட்டுள்ள இடத்தில் தண்ணீ ஊத்துவதற்கு ஆரம்பித்து →→→← இந்தமாதிரி அம்புக்குறியிட்டுள்ள முறையால் கோயிலை சுத்தியும் தண்ணீ ஊத்திக் - கொண்டு வருவார்கள். கடைசியில் கோயிலுக்குள் சென்று பண்டாரத்திடம் இடத்து தண்ணீரை கொடுப்பார்கள். பண்டாரம் அந்த தண்ணீரை வாங்கி முதலில் விநாயகர் மேலும் அதன்பிறகு பெரிய மாரியம்மன் மேலும் அதன்பிறகு மாரியம்மன் மேலும் ஊத்துவார். இந்த முறையால் தான் மூன்று நாளும் தண்ணீர் ஊற்றுகிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு பெண் மூன்று இடம் தண்ணீர் வீதம் ~~ஊத்துவார்கள்~~ ஊற்றுகிறார்கள். கடைசிநாள் கன்னபுரம் ஊர்க்காரர்கள் எல்லாம் சேர்ந்து பெரிய அபிஷேகம் செய்து சர்க்கரைப் பொங்கல் வைத்து

பூஜை செய்து எல்லோருக்கும் ~~பூஜை~~ பிரசாதம் கொடுத்தார்கள்.

---

18 வது கேள்வி

பதில்:- ஒரு மாதத்தில் <u>கிருத்திகை</u> எந்த நாளில் வைக்கலாம் என்று இங்குள்ள யாரும் முடிவு செய்வதில்லை. அதுபற்றி இங்கு யாருக்கும் தெரியாது. பஞ்சாங்கம் or காலண்டர் இவைகளில் அந்த நாளை குறிப்பிட்டு அதற்கு நேரே இட்டிருப்பார்கள் அதை பார்த்துத்-தான் நாங்கள் அந்த நாள் கிருத்திகை நாள் என்று குறிப்பிடுகிறோம். அந்த நாளில்தான் கிருத்திகை பூஜை நடத்துகிறோம். ஆகவே, ~~கி~~ ஒவ்வொரு மாதமும் கிருத்திகை எந்த நாள் என்பதை நட்சத்திர முறைப்படி, சாஸ்திர முறைப்படி ஆராய்ந்து பஞ்சாங்கம் or காலண்டர் இவைகளில் குறிப்பிடுவது பெரிய ஜோதிட, சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள்தான். அவர்கள் இங்கு இல்லை. கிருத்திகை எந்த நாள் என்பதை நாங்கள் தெரிந்து கொள்ளும் முறை இத்துடன் ஒரு தேதிப்பேப்பர் அனுப்பியுள்ளேன் அதைப் - பாருங்கள். அதில் ☆ உடன் இந்த மாதிரி இட்டிருப்பதை பார்த்தும் கார்த்திகை or கிருத்திகை என்று எழுதியிருப்பதை பார்த்தும் நாங்கள் கிருத்திகை நாளை தெரிந்து கொள்கிறோம்.